1979 ஏப்ரல் 11

சமுதாய அடிப்படையிலே ஒருவர் ஆற்றிய தொண்டின் அடிப்படையில் மரபு வரலாறா? எந்த அடிப்படையில் கணிக்கப் போகிறீர்கள்? ஏதாவது அப்படிப்பட்ட மரபு உடையவர்களை அரசு தேர்ந்தெடுத்து தன் கவனத்தில் வைத்துள்ளதா? அப்படி என்றால் யார் யாரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக் கிறது என்று அறிய விரும்பலாமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேர வைத் துணைத்தலைவரவர்களே, யார் யாரை இந்தக் குழுவிலே நியமிப்பது என்று அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை என்பதை முதற்கண் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் ரீதியாக அவர்களுடைய தொண்டு கணிக்கப்படுமா அல்லது சமுதாய ரீதியாக அவர் களுடைய தொண்டைக் கணிக்கப் போகிறீர்களா என்று கேட் டார்கள். இரண்டு ரீதியிலும் நாம் அவர்கள், சமுதாயத்திற்குச் செய்த தொண்டைக் கணக்கிட வேண்டிய நிலையிலே இருக்கி றோம்.

பொது நூலகங்களில் வானொலிப் பெட்டிகளை இயக்குதல்.

*வினா எண் 684—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊராட்சி மன்றங்களின் வானொலிப் பெட்டிகள் பொது நூலகங்களில் வைத்து இயக்கப்படுவதைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஊராட்சி மன்றங்களின் வானொலிப் பெட்டிகள், எல்லா பொது கிளை நூலகங்களிலும், வைத்து இயக்கப்படுவதில்லை. கிளை நூலகங்கள் இயங்க, ஊராட்சி மன்றங்களால் இலவசமாக நூலக ஆணைக் குழுக்களுக்கு, தரப்பட்ட குறிப்பிட்ட சில நூலகக் கட்டிடங்களில்தான் வானொலிப் பெட்டிகள் இயக்கப் படுகின்றன. அவைகளிலும், பொதுவாக வாசகர்களுக்கு இடை யூறு இன்றி ஒரு பகுதியில் நூலக அலுவல் நேரத்திற்குப் பிறகு இயக்கப்படுகின்றன.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, பல்வேறு கிளை நூலகங்களில் மாலை ஐந்து மணியானவுடன் அப்படிப் பட்ட ஒலிபெருக்கிகள் ஒலிபரப்பப் படுவதை நானே நேரில் கேட்டிருக்கிறேன். எங்கள் ஊரிலேயே அப்படிப்பட்ட நிலை

1979 எப்ரல் 11]

மைகள் இன்னும் இருக்கின்றன. அமைதியாக நூலைப் படிக்க வருகிறார்கள். அப்படி அவர்கள் இருக்கும்பொழுது ''அத்தானின் முத்தங்கள் அத்தனையும் முத்துக்கள்'' என்ற பாடல் பாடப்படுமேயானால் அவர்களுடைய மனோநிலை எப்படிப் பாதிக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே, உடனடியாக அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கூடுமானவரைக்கும் அந்த நூலக நேரங்களில் அங்கே வந்து படிக்கின்றவர்களுக்கு இடையூறு ஏற்படாதவண்ணம் வானொலிப் பெட்டிகள் நூலகங்களில் இயக்கப்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய கருத்து.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கான வானொலிப் பெட்டிகளை அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் தங்கள் இல்லங்களிலே வைத்திருப்பதாக அரசு அறியுமா ? அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அப்படி அவர்கள் செய்து கொண்டிருப்பார்களேயானால் இந்தக் கேள்வி கேட்டவர்களுக்கு ஒரு திருப்திகரமான நிலைமையிருப்பதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமையிருக்கும். எனவே, நூலகங்களில் வானொலிப் பெட்டி இல்லை என்றால் நூலகங்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பது நம்முடைய கருத்து. மற்ற விவரங்களை இந்தக் கேள்வியை அந்தத் துறையைச் சேர்ந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

பொதுத் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்கள்.

* வினா எண் 685—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978 மார்ச் தேர்வில் 11ஆம் வகுப்பில் தேர்வு பெறாத மாணவர்கள் + 2 ஆம் வகுப்புகளில் முதலாண்டில் சேர அனுமதிக்கப்படுகின்றனரா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான விதி முறைகள் ஏதேனும் உண்டா ?